# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 182/ந/2025, நாள் 23.12.2025

கோ.கோவிந்தராஜ்,
அசோக் நகர், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1)நகராட்சி ஆணையர்,
மாங்காடு நகராட்சி, மாங்காடு – எதிர்மனுதாரர்கள்
2)M/s.சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிட், மற்றும்
M/s.ஸ்ரீராம் பிராப்பர்ட்டிஸ், மாங்காடு

சென்னை, அசோக் நகர், 15–வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசித்து வரும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவரின் 20.04.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.05.2025–ல் பெறப்பட்டு, 182/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, அசோக் நகர், 15–வது தெரு, கதவு எண்.22/43 என்கிற முகவரியில் வசித்து வரும் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவர் ஆணையர், மாங்காடு நகராட்சிக்கு முகவரியிட்ட தனது 20.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சி அலுவலக எல்லைக்குள் Shriram city Rd, Next to Velammal Vidhyalaya Cyber, Sri Pandian Nagar, Mangadu, Chennai – 122 என்ற முகவரியில் Shriram properties altis Ashraya என்று ராட்சத Digital Banner–கள் சுமார் 80 அடி அகலம் கொண்ட தார்சாலை இருபுறங்களில் ராட்சத concrete தூண்கள் அமைத்து மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் அமைத்துள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். மேலும் இருபுற சாலைகளில் ராட்சத இரும்பு பைப்புகளை பூமியில் புதைத்து altis Ashraya என்ற விளம்பர Banner–கள் அமைத்து இருப்பதையும் இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். நீதிமன்றம் இதுபோல் Digital விளம்பர Board–கள் அமைப்பதற்கு தடை விதித்துள்ளது. இந்த விளம்பர

Board–கள் கடுமையான புயல்காற்று மற்றும் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டால் சரிந்து விழுந்து காற்றில் பறந்து மனித உயிர்களுக்கு அதிக தீங்குகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. மேலும் பொதுசாலையில் இருபுறங்களில் concrete தூண்கள் அமைத்து Arch அமைத்து விளம்பரம் அமைத்திருப்பதை கண்டு வரும் காலங்களில் அருகில் உள்ள கட்டிட உரிமையாளர்களும் Arch அமைக்க நேரிடும். அங்கு Arch அமைத்து விளம்பரம் செய்ய முறையாக நகராட்சி அதிகாரிகள் அனுமதி அளித்திருந்தால் அதற்கான சான்றுகள் மனுதாரருக்கு அளிக்கவும், இம்மனுவை கண்ட 7 தினங்களில் வீடியோ புகைப்பட ஆதாரங்களுடன் ஆக்கிரமிப்பை அகற்றி பதில் அளிக்க மறுக்கும்பட்சத்தில் நகராட்சி இயக்குநர் நிர்வாக மண்டல இயக்குநர் இவர்களுக்கு மேல்முறையீடு மனு அளிக்க நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து மாங்காடு நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 04.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. மாங்காடு நகராட்சி ஆணையர் தனது 10.09.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.2518/2024/எப்–1ல் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு குன்றத்தூர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள சைபர் சிட்டி மனைப்பிரிவிற்கு செல்லும் நுழைவாயிலில் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள Hoardings மற்றும் Arch ஆகியவை முறையாக அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது என்று புகார் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது.

ஏற்கனவே இது தொடர்பாக மனுதாரருக்கு இவ்வலுவலகம் மூலம் ந.க.எண்.2096/2025 நாள் 10.01.2025 அன்று பதில் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இவ்வலுவலக ந.க.எண்.1583/2025/எப்1 நாள் 22.08.2025 அன்று அனுமதி ஏதும் பெறப்பட்டு இருப்பின் சைபர் சிட்டி நிறுவனத்திற்கு இதன் விவரம் கேட்டு அறிவிப்பு நேரடியாக சென்று சார்வு செய்யப்பட்டது.

மேலும், மேற்படி Arch மற்றும் Hoardings Digital Banner ராட்சஷ கான்கிரீட் தூண் அமைந்துள்ள இடமானது மாநில நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடமா அல்லது பட்டா இடத்தில் அமைகிறதா என்ற விவரம் வழங்க கோரியும், நில அளவீடு செய்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வட்டாட்சியர், குன்றத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை 27.10.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 27.10.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட Shriram City Road, Sri Pandian Nagar, Mangadu, Chennai -122 என்ற முகவரியில் சுமார் 80அடி அகலம் கொண்ட Shriram properties altis Ashraya என்ற ராட்சத Digital Banner–கள் தார்சாலையின் இருபுறங்களிலும் ராட்சத concrete தூண்கள் அமைத்து ஆபத்தான வகையில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இருபுறங்களிலும் சாலைகளில் ராட்சத இரும்பு பழுப்புகளை பூமியில் புதைத்து altis Ashraya என்ற விளம்பர Banner–கள் வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் பாதுகாப்பற்ற இதுபோன்ற Digital விளம்பர Board–கள் அமைப்பதற்கு தடைவிதித்துள்ள நிலையில் பொதுச்சாலையில் இருபுறங்களிலும் concrete தூண்கள் அமைத்து Arch அமைத்து விளம்பரம் அமைத்திருப்பதை கண்டு வருங்காலங்களில் அருகில் உள்ள கட்டிட உரிமையாளர்களும் Arch அமைக்க நேரிடும், என்பதை கருத்திற்கொள்ள வேண்டிய அவசியமாகிறது.

இவ்விளம்பர Board–கள் கடுமையான புயல் காற்று மற்றும் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டால், சரிந்து விழுவதோடு, அதன் உதிரி பாகங்கள் காற்றில் பறந்து பொதுமக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

மேற்படி ராட்சத Arch அமைத்து விளம்பரம் செய்ய நகராட்சியில் அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் மேற்படி விளம்பர பதாகைகளை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத்தெரிவித்துள்ளார்.

6) மாங்காடு நகராட்சி ஆணையரின் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர் 27.10.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை தெரிவித்துள்ளார்.

"1) மனுதாரர் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு குன்றத்தூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள சைபர் சிட்டி மனைப்பிரிவிற்கு செல்லும் நுழைவாயிலில் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள Hoardings மற்றும் Arch ஆகியவை முறையாக அனுமதிபெற்று, பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது.

2) இது தொடர்பாக M/s.ஸ்ரீராம் பிராபர்டிஸ், மாங்காடு மற்றும் M/s.சைபர் சிட்டி, மாங்காடு ஆகிய நிறுவனங்களுக்கு இந்நகராட்சி ந.க.எண்.606/2023/எப்1, நாள் 22.08.2025–ன் மூலம் பதாகை மற்றும் இரும்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பு மற்றும் அனைத்து பொருட்களையும் அகற்றுமாறு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3) மேற்படி Arch–க்கு plan approval–ல் CMDA அனுமதி வழங்கியுள்ளது. நகராட்சியின் மூலம் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

4) மேலும் சைபர் சிட்டி நிறுவனத்திடம் 06.10.2025 அன்றைய கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், பிரிவு 117Q-ல் ஒரு நிறுவனத்தின் தொழில் சார்ந்த நிறுவனம் விளம்பரம் வைத்துக்கொள்ள மேற்கண்ட சட்டத்தின்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டப்பிரிவின் ஒரு பகுதியானது.

"117.Q. Exemption:- nothing contained in the chapter shall apply to any hoarding, digital banner or placard on which is exhibited any advertisement which relates to,-

(a) the trader or business carried on within the land or building upon or over which such hoarding, digital banner or placard is erected or to any sale or letting of such land or building or any effects therein or to any sale, entertainment or meeting to be held upon or in such land or building;

(b) the name of the land or building, upon or over which the hoarding, digital banner or placard is erected or to the name of the owner or occupier of such land or building:

Provided that the exemption under this section shall be subject to such size and nature of the hoarding, digital banner or placard, as may be prescribed.

5) மேற்படி சைபர் சிட்டி நிறுவனத்திடம் ஏற்கனவே உள்ள Uni pole (Facing west right side) (Facing North left side) அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகைகளுக்கு அனுமதி வழங்க 06.10.2025 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படி சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

a) Stability Certificate Structural Engineer–இடம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.
b) விளம்பர பதாகைகள் அளவு வரைபடம் 6.0M x 3.0 M வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.
c) Topo ஸ்கெட்ச் இணைக்கப்பட்டுள்ளது.
d) Electrical Stability Certificate Tamil Nadu Government Certified Electrical Licensed Engineer இடம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.
e) GST Registration Certificate இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 2023ன்படி விளம்பர பதாகைகளை வைப்பதற்கு அனுமதி கோரிய விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குதல் குறித்து பிரிவு 321–ன்படி ஒற்றை சாரள ஒப்புதல் (Single Window Approval Committee) கூட்டம் நடந்த 09.10.2025 அன்று காவல் ஆய்வாளர் போக்குவரத்து அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத்தொடர்ந்து 13.10.2025 திங்கட்கிழமை காலை 11 மணி அளவில் ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் காவல் உதவி ஆணையர் ஆவடி சரகம் மற்றும் காவல் ஆய்வாளர்(போக்குவரத்து), மாங்காடு, நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் அலுவலர் கலந்து கொண்டனர்.

6) மேற்படி கூட்டத்தில் காவல் உதவி ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி வரப்பெற்ற விண்ணப்பங்களை ஆய்வு செய்து அனுப்பி வைக்குமாறு கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி 13.10.2025 தேதியில் வரப்பெற்ற விண்ணப்பங்களை பரிந்துரை செய்து தர உதவி ஆணையர்(போக்குவரத்து) ஆவடி சரகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரிந்துரையினை நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பித்தபின் மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7) Tamil Nadu Urban Local Bodies Act, 1998. பிரிவு 117.Q–ன் வழி மேற்படி பதாகைகளை அமைப்பதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அதில் குறிப்பிட்டுள்ளவாறு பதாகைகளின் அளவு, இயல்பு ஆகியவற்றை சட்டத்திற்குட்பட்டு உள்ளதா என்பதை ஆய்வு செய்து மேற்படி பதாகைகள் மூலம் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களின் தலையாய கடமையாகும் என்பதை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்யத்தக்கவகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் இதன் மூலம் மாண்பமை முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) விசாரணையின்போது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மாங்காடு நகராட்சி ஆணையரின் 22.10.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாங்காடு குன்றத்தூர் மெயின்ரோட்டில் அமைந்துள்ள சைபர் சிட்டி மனைப்பிரிவிற்கு செல்லும் நுழைவாயில் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள Hoardings மற்றும் Arch ஆகியவை முறையாக அனுமதியின்றி

அமைக்கப்பட்டுள்ளது என்று புகார் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது.

ஏற்கனவே இது தொடர்பாக மனுதாரருக்கு இவ்வலுவலகம் மூலம் ந.க.எண்.3096/2024 நாள் **10.01.2025** அன்று பதில் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இவ்வலுவலக ந.க.எண்.**606/2023**/எப்1, நாள் **22.08.2025** அன்று அனுமதி ஏதும் பெறப்பட்டு இருப்பின், மேற்படி விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி சைபர் சிட்டி நிறுவனத்திற்கு இதன் விவரம் கேட்டு அறிவிப்பு நேரடியாக சென்று சார்வு செய்யப்பட்டது.

மேலும் மேற்படி Arch மற்றும் Hoardings Digital Banner ராட்ஷச கான்கிரிட் தூண் அமைந்துள்ள இடமானது மாநில நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடமா அல்லது பட்டா இடத்தில் அமைகிறதா என்ற விவரம் வழங்க கோரியும், நில அளவீடு செய்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வட்டாட்சியர் குன்றத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ **16.10.2025** நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ளபடி மேற்படி கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து, வட்டாட்சியர் குன்றத்தூர் அவர்களிடமிருந்து இந்நாள் வரை நில அளவீடு ஏதும் செய்து தரப்படவில்லை. மேலும் சைபர் சிட்டி நிறுவனத்திடம் விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் விளம்பர பதாகைகள் அமையும் இடம் சைபர் சிட்டி நிறுவனத்திற்கு சொந்தமான இடமாக தெரிய வருகிறது.

மேற்படி தங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளது என 04.09.2025 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சைபர் சிட்டி நிறுவனத்திடமிருந்து 06.10.2025 அன்றைய கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 117.Q. Exemption ஒரு நிறுவனத்தின் தொழில் சார்ந்த விளம்பரம் வைத்துக்கொள்ள மேற்கண்ட சட்டத்தின்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

<u>Tamil Nadu Urban Local Bodies Act 1998, under section 117.Q Exemption.</u>

Nothing contained in this chapter shall apply to any hoarding, digital banner or placard on which is exhibited any advertisement which relates to:

a) the trade or business carried on with in the land or building upon or over which such hoarding digital banner or placard is erected, or to any sale or letting of such land and building or any effects therein, or to any sale, entertainment or meeting to be held upon or in such land or building;
b) the name of the land or building upon or over which the hoarding, digital banner or placard is erected on the name of the owner or occupier of such land or building, provided that the exemption under this section shall be subject to such size and nature of the hoardings, digital banner or placard as may be prescribed. என மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சைபர் சிட்டி நிறுவனத்திடம் ஏற்கனவே Uni pole (Facing west Right Side), (Facing North Left side) அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகைகளுக்கு அனுமதி வழங்க **06.10.2025** அன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படி சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1) Stability Certificate Structural Engineerயிடம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.
2) விளம்பர பதாகைகள் அளவு வரைபடம் 6.0M x 3.0 M வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது.
3) Topo ஸ்கெட்ச் இணைக்கப்பட்டுள்ளது.
4) Electrical Stability Certificate Tamil Nadu Government Certified Electrical Licensed Engineerயிடம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.
5) GST Registration Certificate இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 2023 விளம்பர பதாகைகளை வைப்பதற்கு அனுமதி கோரி வரப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குதல். ஒற்றை சாளர ஒப்புதல் குழு (Single Window Approval Committee) கூட்டம் நடைபெற 09.10.2025 காவல் ஆய்வாளர் போக்குவரத்து அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட மனுக்களை ஒற்றை சாளர ஒப்புதல்குழு (Single Window Approval Committee)-ல் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும் என தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 321–ன்படி "Every Application made under rule 320 shall be scrutinized by Single Window Committee Constituted for the purpose, consisting of officers from the Municipality concerned and a Traffic Police officer not below the rank of Inspector of Police of the area concerned and submit its recommendation to the Commissioner". அதன்படி 13.10.2025 திங்கட்கிழமை அன்று காலை 11.30 மணியளவில் ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் காவல் உதவி ஆணையர் ஆவடி சரகம் மற்றும் காவல் ஆய்வாளர் மாங்காடு போக்குவரத்து, நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் காவல் உதவி ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி வரப்பெற்ற விண்ணப்பங்களை பரிந்துரை செய்து தர தங்களுக்கு அனுப்பி வைக்குமாறு இக்கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி 13.10.2025 தேதியில் வரப்பெற்ற விண்ணப்பங்களை பரிந்துரை செய்து தர உதவி ஆணையர் போக்குவரத்து காவல் ஆவடி சரகம் ஐயப்பன்தாங்கல் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பங்களுக்கு பரிந்துரை கடிதம் வரப்பெற்ற பின்னர் விளம்பர பதாகைகளுக்கு உரிய வரி மற்றும் வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்கப்படும் என இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

8) 2–ஆம் எதிர்மனுதாரரான சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிட்., சார்பாக உதவி பொது மேலாளர் 27.10.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்:

" மனுதாரர் திரு.கோ.கோவிந்தராஜ் என்பவர் சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட்டுக்கு எதிராக விளம்பர பேனர்கள் வைத்தது தொடர்பாக புகார் அளித்துள்ளார். இந்த விளம்பர பேனர்களை வைப்பதற்கான விண்ணப்பம் 06.10.2025 அன்று மாங்காடு நகராட்சியில் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் சமர்ப்பித்துள்ளோம்.

1.Application for license to erect a hoarding.
2.Stability Certificate.
3.Sketch showing the proposed advertisement hoarding size 6.0 M x 3.0 M
4.Site and Google photo.
5.Electrical Stability Certificate.

6.Company PAN and GST.
7.Acknowledgtement dt. 13.10.2025.
8.Two DDs for a sum of Rs.1000/- each vide numbers 180724, 180725.

மேலும் இரண்டு Flex Hoarding–க்கு விண்ணப்பங்கள் கொடுத்துள்ளோம். Flex Hoarding உயரம் 34.98 அடி மட்டுமே, புகார்தாரர் கூறியவாறு 80 அடி அல்ல. பிறகு நாங்கள் 117Q–வின் வழி விலக்கு கோரி மாங்காடு நகராட்சி ஆணையருக்கு 06.10.2025 நாளிட்ட கடிதம் கொடுத்துள்ளோம்.

பிறகு Ashraya மற்றும் Altis Ashraya Banner, Cyber City Housing Private Limited–க்கு உரியது அல்ல. அது ஸ்ரீராம் பிராப்பர்டிஸ்க்கு உரியது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்". எனத்தெரிவித்துள்ளார்.

9) மற்றொரு 2–ஆம் எதிர்மனுதாரரான ஸ்ரீராம் பிராபர்ட்டிஸில் பணிபுரியும் பொது மேலாளர் 27.10.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் புகாராகத்தெரிவித்துள்ள பேனர்கள் மற்றும் தூண்கள் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை இன்னும் இரண்டு நாட்களுக்குள் நகராட்சிக்கு சமர்ப்பிக்கிறேன் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்". எனத்தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரரான மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, மாங்காடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் மனுதாரர்களின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சி எல்லைக்குள் Shriram city Rd, Next to Velammal Vidhyalaya Cyber, Sri Pandian Nagar, Mangadu, Chennai – 122 என்ற முகவரியில் Shriram properties altis Ashraya என்று ராட்சத Digital Banner–கள் சுமார் 80 அடி அகலம் கொண்ட தார்சாலையின் இருபுறங்களில் ராட்சத concrete தூண்கள் அமைத்து மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் இருபுற சாலைகளில் ராட்சத இரும்பு பழுப்புகளை பூமியில் புதைத்து Altis Ashraya என்ற விளம்பர Banner–கள் அமைத்துள்ளனர் எனவும், நீதிமன்றம் இதுபோல் Digital விளம்பர Board–கள் அமைப்பதற்கு தடை விதித்துள்ளது எனவும், இந்த விளம்பர Board–கள் கடுமையான புயல்காற்று மற்றும் இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டால் சரிந்து விழுந்து காற்றில் பறந்து மனித உயிர்களுக்கு அதிக தீங்குகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது எனவும், மேலும் பொதுசாலையில் இருபுறங்களில் concrete தூண்கள் அமைத்து Arch அமைத்து விளம்பரம் அமைத்திருப்பதை கண்டு, வரும் காலங்களில் அருகில் உள்ள கட்டிட உரிமையாளர்களும் Arch அமைக்க நேரிடும் என்றும், அங்கு Arch அமைத்து விளம்பரம் செய்ய முறையாக நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி சைபர் சிட்டி நிறுவனத்திற்கு விவரம் கேட்டு அறிவிப்பு மாங்காடு நகராட்சியால் நேரடியாக சென்று சார்வு செய்யப்பட்டுள்ளதும், மேலும் மேற்படி Arch மற்றும் Hoardings Digital Banner ராட்ஷச கான்கிரிட் தூண் அமைந்துள்ள இடமானது மாநில நெடுஞ்சாலைக்கு சொந்தமான இடமா அல்லது பட்டா இடத்தில் அமைகிறதா என்ற விவரம் வழங்க கோரியும், நில அளவீடு செய்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வட்டாட்சியர் குன்றத்தூர் அவர்களுக்கு மாங்காடு நகராட்சியனரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், சைபர் சிட்டி நிறுவனத்தினர்

விளம்பர பதாகைகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் விளம்பர பதாகைகள் அமைத்துள்ள இடம் சைபர் சிட்டி நிறுவனத்திற்கு சொந்தமான இடமாக தெரிய வருகிறது என்பதும், சைபர் சிட்டி நிறுவனத்திடமிருந்து 06.10.2025 அன்றைய கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 117,Q. Exemption என்ற தலைப்பில் ஒரு நிறுவனத்தின் தொழில் சார்ந்த விளம்பரம் வைத்துக்கொள்ள மேற்கண்ட சட்டத்தின்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதும் மாங்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் சைபர் சிட்டி நிறுவனம் அமைத்துள்ள Arch–க்கு plan approval CMDA-வினால் வழங்கப்பட்டுள்ளதும், மாங்காடு நகராட்சியினரால் வழங்கப்படவில்லை என்பதும், Tamil Nadu Urban Local Bodies Act, 1998 பிரிவு 117–ன்வழி மேற்படி பதாகைகளை அமைப்பதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அதில் குறிப்பிட்டுள்ளவாறு பதாகைகளின் அளவு, இயல்பு ஆகியவற்றை சட்டத்திற்குட்பட்டு உள்ளதா என்பதை ஆய்வு செய்து மேற்படி பதாகைகள் மூலம் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களின் தலையாய கடமையாகும் என்பதை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்யத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரமும் மாங்காடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

2–ஆம் எதிர்மனுதாரரான சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தங்களது விளம்பர பேனர்களை வைப்பதற்கான விண்ணப்பத்தினை 06.10.2025 அன்று கீழ்க்கண்ட ஆவணங்களுடன் மாங்காடு நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளதும், ( 1.Application for license to erect a hoarding, 2.Stability Certificate, 3.Sketch showing the proposed advertisement hoarding size 6.0 M x 3.0 M, 4.Site and Google photo, 5.Electrical Stability Certificate, 6.Company PAN and GST, 7.Acknowledgtement dt. 13.10.2025, 8.Two DDs for a sum of Rs.1000/- each vide numbers 180724, 180725.) மேலும் இரண்டு Flex Hoarding–க்கு இரண்டு விண்ணப்பங்கள் நகராட்சிக்கு கொடுத்துள்ளதும், Flex Hoarding உயரம் 34.98 அடி மட்டுமே, புகார்தாரர் கூறியவாறு 80 அடி அல்ல எனவும், தாங்கள் 117Q–வின்வழி விலக்கு கோரி மாங்காடு நகராட்சி ஆணையருக்கு 06.10.2025 அன்று கடிதம் கொடுத்துள்ளதும், Ashraya மற்றும் Atis Ashraya Banner, Cyber City Housing Private Limited–க்கு உரியது அல்ல அது ஸ்ரீராம் பிராப்பர்டிஸ்க்கு உரியது என்பதும் 2–எம் எதிர்மனுதாரரான சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் ஆஜரான உதவி பொதுமேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் புகாராகத் தெரிவித்துள்ள பேனர்கள் மற்றும் தூண்கள் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது என்பது ஸ்ரீராம் பிராப்பர்டிஸ் நிறுவனத்தின் சார்பில் ஆஜரான பொதுமேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், விளம்பர பேனர்கள் மற்றும் hoardings குறித்த மாண்பமை உயர்நீதிமன்ற ஆணைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதனையும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 117–ன் வழி மேற்படி பதாகைகளை அமைப்பதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் மேற்படி சட்ட பிரிவு 117–ல் குறிப்பிட்டுள்ள வரையறைகளுக்குள் பதாகைகள் அமைந்துள்ளதா என்பதையும் கள ஆய்வு செய்து அது குறித்த அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கவும் மாங்காடு நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், மேற்படி பதாகைகள் மூலம் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களின் தலையாய கடமையாகும் என்பதை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்புக்கு உறுதி செய்யத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, தமிழ்நாடு அரசு விதிகள்,

மாண்பமை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி உரிய நடவடிக்கைகளை தொடர மாங்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 23–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.கோ.கோவிந்தராஜ்,
எண்.22/43, 15–வது தெரு, அசோக் நகர்,
சென்னை – 600 083.

2) நகராட்சி ஆணையர்,
மாங்காடு நகராட்சி,
மாங்காடு.

3) M /s.சைபர் சிட்டி ஹவுசிங் பிரைவேட் லிட்.,
சைபர் சிட்டி பில்டர்ஸ் & டெவலப்பர்ஸ் (P) லிட்.,
(சைபர் சிட்டி வளாகம்)
மாங்காடு–குன்றத்தூர் பிரதான சாலை,
மாங்காடு – 600 122.

4)M /s.ஸ்ரீராம் பிராப்பர்டிஸ்,
(சைபர் சிட்டி வளாகம்)
மாங்காடு–குன்றத்தூர் பிரதான சாலை,
மாங்காடு – 600 122.

5)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்